மகளிர் குழுக்களுக்கு தொடர்ந்து வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை

அரியலூர், நவ. 3: அரியலூர் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்காக, தொடர்ந்து வங்கிக் கடன் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் ந. மிருணாளினி தெரிவித்தார்.

அரியலூர் மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ந. மிருணாளினி தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, சுழல் நிதி மற்றும் வாழ்வாதார நிதி வழங்கப்பட்ட விவரங்கள், குழுக்களின் புதுப்பித்தல் பணிகள், மனநலப் பயிற்சிகள், சுயதொழில் மூலம் தயாரிக்கப்படும் பொருள்களின் விற்பனை மற்றும் 'லட்சாதிபதி சகோதரி' திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மகளிர் சுய உதவிக்குழுக்கள் சுயதொழில் தொடங்குவதற்கான வங்கிக் கடன் இணைப்பு இலக்குகளை விரைந்து எட்டவும், குழுக்கள் தயாரிக்கும் பொருள்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்த்து விற்பனையை அதிகரிக்கவும் வேண்டும்.

மேலும், சுய உதவிக்குழுக்களின் புதுப்பித்தல் பணிகளை உரிய காலத்துக்குள் முடிக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார். கூட்டத்தில் மகளிர் திட்ட இயக்குநர் சு. தேன்ராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி

பெரம்பலூர், நவ. 3: பெரம்பலூர் ஆட்சியரக வளாகத்தில், குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டத்தில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும், அவர்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் மற்றும் பாலியல் தொல்லைகளைத் தடுத்திடும் வகையிலும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒருபகுதியாக, மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் ப. அப்துல் ராசிக் தொடங்கிவைத்து பார்வையிட்டார்.

குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் செயல்பாடுகள், போக்ஸோ, சிறார் திருமணம் மற்றும் குழந்தைகள் தத்தெடுப்பு தொடர்பான விழிப்புணர்வு, குழந்தைகள் உதவி எண் குறித்து, 4 வாகனங்களில் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் சீ.ப. பிரியா, குழந்தைகள் நலக் குழுத் தலைவர் இந்திரா காந்தி, இளைஞர் நீதிக் குழும உறுப்பினர் சிவகுமார், குழந்தைகள் நலக் குழு உறுப்பினர் ஜீவானந்தம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூரில் சுகாதார செவிலியர்கள் ஆர்ப்பாட்டம்



பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரகம் எதிரே செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சுகாதார செவிலியர்கள்.

பெரம்பலூர், நவ. 3: துணை சுகாதார நிலையத்திலிருந்து இடைநிலை சுகாதாரப்பணியாளர்களை அகற்றவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, பெரம்பலூரில் தமிழ்நாடு அரசு கிராம, பகுதி, சமுதாய சுகாதார செவிலியர்கள் கூட்டமைப்பினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரகம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, அச்சங்கத்தின் மாவட்டத் தலைவர் சந்தானலட்சுமி தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் மெர்சி கிளாரா, மாவட்ட பொருளாளர் நளினி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

துணை சுகாதார நிலையத்திலிருந்து இடைநிலை சுகாதாரப் பணியாளர்களை அகற்ற வேண்டும். கிராம சுகாதார செவிலியர்கள் மேற்கொள்ளும் தாய்-சேய் நலப்பணியை இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் செய்வதாக அறிக்கை அனுப்புவதை நிறுத்த வேண்டும். பாலின பாகுபாடற்ற பதவி உயர்வு நிலை- 1 வழங்க வேண்டும். மாவட்ட அளவில் திட்டப் பணிகளுக்கான பதவி உயர்வு வழங்க வேண்டும்.

சமுதாய சுகாதார செவிலியர்களுக்கு தாய்-சேய் நல அலுவலர் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் முழக்கமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில், திரளான சுகாதார செவிலியர்கள் பங்கேற்றனர்.

விலைவாசி உயர்வுக்கு எதிர்ப்பு: கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



அரியலூரில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர்.

அரியலூர்/ பெரம்பலூர்/ கரூர், நவ.3: விலைவாசி உயர்வைக் கண்டித்து, அரியலூர் அண்ணா சிலை அருகே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் செவ்வாய்க்கிழமை மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி உயர்வைக் கண்டித்தும், அதைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. ஆர்ப்பாட்டத்துக்கு, கட்சியின் ஒன்றியச் செயலர் து. பாண்டியன் தலைமை வகித்தார். மாவட்ட துணைச் செயலர் டி.தண்டபாணி கோரிக்கைகளை வலியுறுத்தினார். பொருளாளர் ஜி.ஆறுமுகம் உள்ளிட்ட நிர்வாகிகள் கோரிக்கை முழக்கமிட்டனர்.

ஜெயங்கொண்டம்: காந்தி பூங்கா முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, அக்கட்சியின் மாவட்டச் செயலர் நடராஜன் தலைமை வகித்தார். மாவட்டக் குழு உறுப்பினர்கள் பன்னீர்செல்வம், கலியபெருமாள், ஒன்றியக் குழு உறுப்பினர் சபாபதி உள்ளிட்டோர் கோரிக்கை முழக்கமிட்டனர்.

பெரம்பலூர்: பெரம்பலூர் பழைய பேருந்து நிலைய வளாகத்திலுள்ள காந்தி சிலை எதிரே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்துக்கு, இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்டச் செயலர் எஸ். அகஸ்டின் தலைமை வகித்தார். இந்த ஆர்ப்பாட்டத்தில், கட்சி நிர்வாகிகள், இந்திய தொழிற்சங்க மைய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கரூர்: இதே கோரிக்கைகளை வலியுறுத்தி கரூர் தலைமை அஞ்சலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மாவட்டச் செயலர் எம்.ஜோதிபாசு தலைமை வகித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஜி.ஜீவானந்தம், சி.முருகேசன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். முன்னதாக மாநகரச் செயலர் தண்டபாணி வரவேற்றார்.

வேட்டமங்கலத்தில் விவசாயிகளுக்கு காளான் சாகுபடி பயிற்சி முகாம்

கரூர், நவ. 3: கரூர் மாவட்டம், வேட்டமங்கலத்தில் விவசாயிகளுக்கு காளான் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தோட்டக்கலைத் துறையின் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் நடைபெற்ற பயிற்சி முகாமுக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் த.ஜெகன் தலைமை வகித்தார். முகாமில் காளான் சாகுபடி தொழில்நுட்பம் என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு காளான் எவ்வாறு சாகுபடி செய்வது, அதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலை, கூடுதல் வருமானம் பெறும் வழிமுறை குறித்து செயல்முறை விளக்கத்துடன் புழுதேரி வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி தமிழ் செல்வன் விளக்கமளித்தார். முகாமில் தோட்டக்கலை அலுவலர் ஸ்ரீ சந்தியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஏற்பாடுகளை உதவி தோட்டக்கலை அலுவலர் அருட்செல்வன் செய்திருந்தார். முகாமில் வேட்டமங்கலம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் திரளாக பங்கேற்றனர்.

108 ஆம்புலன்ஸ் சார்பில் செவிலியர் மாணவிகளுக்கு முதலுதவி பயிற்சி

அரியலூர், நவ.3: அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அன்னை தெரசா நர்சிங் கல்லூரியில் பயிலும் செவிலியர் மாணவிகளுக்கு108 ஆம்புலன்ஸ் சேவை சார்பில் முதலுதவிப் பயிற்சி திங்கள்கிழமை அளிக்கப்பட்டது.

108 ஆம்புலன்ஸ் சேவையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இ.எம்.இ. அருள்ராஜ் தலைமையில், அவசர மருத்துவ நுட்புநர்கள் மீனா, பாக்கியலட்சுமி மற்றும் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் செல்வம், செல்வகுமார் ஆகியோர் மாணவிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சியில் அன்னை தெரசா செவிலியர் கல்லூரி மாணவிகள், குமார் இன்டர்நேஷனல் கம்யூனிட்டி கல்லூரி பொது சுகாதார உதவியாளர்கள் மற்றும் தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையத்தின் சுகாதார நலன் பிரிவு சார்பில் 21 நாள்கள் அவசர மருத்துவத் தொழில்நுட்பப் பயிற்சி பெற்று வரும் ஆண்டிமடம் அரசு மேல்நிலைப் பள்ளியின் 12-ஆம் வகுப்பு செவிலியர் பிரிவு மாணவிகள் கலந்து கொண்டனர்.

கல்லூரித் தலைவர் முத்துக்குமரன் தலைமை வகித்து வரவேற்றார். கல்லூரி முதல்வர் கோகுலப்பிரியா நன்றி கூறினார்.

தரமான ரேஷன் பொருள்களை தொடர்ந்து வழங்க நடவடிக்கை

அரியலூர்,நவ. 3: அரியலூர் மாவட்டத்தில், நியாய விலைக்கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு தொடர்ந்து தரமான உணவுப் பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் ந. மிருணாளினி தெரிவித்தார்.

அரியலூர் மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் திங்கள்கிழமை மாலை நடைபெற்ற பொது விநியோகத் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் அவர் தெரிவித்தது:

வடகிழக்குப் பருவ மழை காலங்களில் தங்கு தடையின்றி நியாய விலைக்கடைகள் மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அத்தியாவசியப் பொருள்கள் உரிய நேரத்தில் விநியோகம் செய்திட வேண்டும். புதிய குடும்ப அட்டைக்கான விண்ணப்பங்களின் மீது உரிய காலத்துக்குள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நியாய விலைக் கடைகளின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா. மல்லிகா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ஜெ. யோகஜோதி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரஸ்ட்", C54 & 55, சூப்பர் B-4, திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032.
கிளை அலுவலகம்: 2வது தளம், பிஎல்ஏ டவர்ஸ், எண்.30, காந்தி நகர், திண்டுக்கல் மெயின் ரோடு, பொன் நகர், திருச்சி, தமிழ்நாடு – 620001
கிளை அலுவலகம்: கதவு எண்.44/41A, 2வது தளம், அன்லிமிடெட் மேல்தளம், கரூர் வைஸ்யா வங்கி அருகில், குமலங்குட்டை, பெருந்துறை சாலை, ஈரோடு – 638011.
கிளை அலுவலகம்: தரை தளம், 16, புதிய ரயில் நிலையம் சாலை, அலமீன் தெரு எதிரில், கும்பகோணம் – 612001
தொடர்பு எண்: திரு. தியாகராஜன் – மொபைல் எண். 9940516215 & திரு. தியாகு – மொபைல் எண்.9894265133

அசையாச் சொத்து விற்பனைக்கான E–ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9(1)–இன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான E–ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரருக்கு / கூட்டுக் கடன்தாரருக்கு / அடமானதாரர்களுக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்படும் அசையாச் சொத்துக்கள் இனி இங்கு **சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** எனக் குறிப்பிடப்பட உள்ள **சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் **நேரடி/அடையாள சுவாதீனம்** செய்யப்பட்டுள்ளன. இந்தக் கடனீட்டுச் சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் E–ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும். மேலும் இதன் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது யாதெனில் இதற்காக https://bankauctions.in இணையத்தளத்தில் நாங்கள் பொது E–ஏலம் நடத்த உள்ளோம்.

1. கடன் கணக்கு எண்: HE01ICH00000006699; **கடன்தாரர், கூட்டு கடன்தாரர் மற்றும் அடமானதாரர்களின் பெயர்:** 1. திருமதி. மகேஸ்வரி (இணை கடன்தாரர் மற்றும் காலஞ்சென்ற பி. பாலகிருஷ்ணன் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு), க/பெ. காலஞ்சென்ற பி. பாலகிருஷ்ணன், 2. திருமதி. கருப்பாயி (இணை கடன்தாரர் மற்றும் காலஞ்சென்ற பி. பாலகிருஷ்ணன் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு), க/பெ. திரு. பெருமாள், 3. மைனர். கிருஷ் கல்யாண் (காலஞ்சென்ற பி. பாலகிருஷ்ணன் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு), த/பெ. காலஞ்சென்ற திரு. பி. பாலகிருஷ்ணன், இவரது இயற்கை பாதுகாவலர் திருமதி. மகேஸ்வரியால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது, 4. மைனர். லித்திகா பூஜா (காலஞ்சென்ற பி. பாலகிருஷ்ணன் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு), க/பெ. காலஞ்சென்ற திரு. பி. பாலகிருஷ்ணன், இவரது இயற்கை பாதுகாவலர் திருமதி. மகேஸ்வரியால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது, 5. திரு. முருகன் (இணை கடன்தாரர்), த/பெ. பெருமாள், 6. திரு. குமார் (இணை கடன்தாரர்), த/பெ. பெருமாள், 7. பி.கே. கிராபிக்ஸ் (அதன் தற்போதைய உரிமையாளரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது), முகவரி: எண் 70–1, பாண்டரிநாதன் தெரு, மணச்சநல்லூர், திருச்சி, தமிழ்நாடு – 621005.; **பிரிவு 13(2)–ன் கீழான கேட்பு அறிவிப்பு தேதி மற்றும் தொகை:** 30–04–2025 மற்றும் 30–04–2025 அன்றைய நிலவரப்படி ரூ.20,16,523/–; **சொத்து/சொத்துகளின் விவரங்கள்:** திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், ஸ்ரீரங்கம் மற்றும் மணச்சநல்லூர் சார்பதிவாளர் எல்லைக்குட்பட்ட, லால்குடி தாலுகா, மணச்சநல்லூர் கிராமம், நத்தம் சர்வே எண். 19A/1A1A1A, பாண்டரிநாதன் தெரு, புதிய வார்டு 6–ல் அமைந்துள்ள 1,416 சதுர அடி பரப்பளவிலான நிலம் மற்றும் கட்டிடம், இதில் கதவு எண். 70/1 மற்றும் சொத்து வரி மதிப்பீட்டு எண். 1631–ஐக் கொண்ட, 10 X 10 = 100 சதுர அடி பரப்பளவிலான 60 ஆண்டுகள் பழமையான வைக்கோல் வேய்ந்த வீடு. இதன் நான்கு எல்லைகள்: கிழக்கில் – செட்டி மங்களத்தாள் என்பவருக்கு சொந்தமான சொத்து, மேற்கில் – ஹரிதாஸ் என்பவருக்கு சொந்தமான சொத்து, வடக்கில் – சாலை, தெற்கில் – கடை. அளவீடு: கிழக்கு மேற்காக 24 அடி (இருபுறமும்), வடக்கு தெற்காக 59 அடி (இருபுறமும்), ஆக மொத்தம் 1,416 சதுர அடி பரப்பளவு. **(நேரடி சுவாதீனம்)**

நிர்ணய விலை: ரூ.38,00,000/- முன் வைப்புத் தொகை : ரூ.3,80,000/- ஏலம் உயர்த்தும் தொகை : ரூ.50,000/-

2. கடன் கணக்கு எண்: X0HEKRU00002471802, X0HEKRU00003174074 மற்றும் HE02KRU00000005169;; **கடன்தாரர், கூட்டு கடன்தாரர் மற்றும் அடமானதாரர்களின் பெயர்:** 1. முத்துராமன் இ, 2. கிரிஜா வி, 3. ஆராத்யா எம் (காலஞ்சென்ற திருமதி. பானுப்ரியா எஸ் ஆர்–ன் சட்டப்பூர்வ வாரிசு மற்றும் மகள்), 4. இ முத்துராமன் சார்ட்டர்டு அக்கவுண்டன்ட் எண்.39, தெற்கு மாடவிளாகம் தெரு, கரூர், கரூர், தமிழ்நாடு–639001; **பிரிவு 13(2)–ன் கீழான கேட்பு அறிவிப்பு தேதி மற்றும் தொகை:** 21–04–2023 மற்றும் 21–04–2023 அன்றைய நிலவரப்படி ரூ.1,66,60,950/–; **சொத்து/சொத்துகளின் விவரங்கள்:** கரூர் பதிவு மாவட்டம், மேலக்கரூர் சார்பதிவாளர் எல்லைக்குட்பட்ட, கரூர் நகராட்சி எல்லைக்குள், கரூர் தாலுகா, கஸ்பா கரூர் நகரம், வார்டு எண்.1, டிவிஷன் எண்.1, நகர சர்வே (T.S.) எண்.2923, தெற்கு மாடவிளாகம் தெருவில் (முன்பு கட்டிடம் தற்போது காலி நிலம்) அமைந்துள்ள 4,800 சதுர அடி அதாவது 445.93 சதுர மீட்டர் பரப்பளவிலான நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்துப் பகுதிகளும், அத்துடன் மின் இணைப்பு (E.B.Sc.) எண்.002–010–315, குடிநீர் குழாய் இணைப்பு எண்.679, பழைய கதவு எண்.34–க்கு புதிய கதவு எண்.39, பழைய மதிப்பீட்டு எண்.3601–க்கு புதிய மதிப்பீட்டு எண்.7963 கொண்ட வீடு மற்றும் அனைத்து வசதியுரிமைகள் மற்றும் பாதை உரிமைகளுடன் பின்வரும் நான்கு எல்லைகளுக்கு உட்பட்டு அமைந்துள்ளது:– எல்லைகள்: கிழக்கு–மேற்கு தெருவுக்கு தெற்கிலும், விசாலாட்சி ஆச்சி சொத்துக்கு மேற்கிலும், நகராட்சி கிழக்கு–மேற்கு நிலத்திற்கு வடக்கிலும், ஓய்வுபெற்ற போஸ்ட் மாஸ்டர் ராமமூர்த்தி ஐயர் வீட்டுக்கு கிழக்கிலும். அளவீடுகள்: கிழக்கு–மேற்காக இருபுறமும் 30 அடி, வடக்கு–தெற்காக இருபுறமும் 160 அடி. மொத்த பரப்பளவு: 4,800 சதுர அடி அதாவது 445.93 சதுர மீட்டர். **(நேரடி சுவாதீனம்).**

நிர்ணய விலை: ரூ.2,50,00,000/- முன் வைப்புத் தொகை : ரூ.25,00,000/- ஏலம் உயர்த்தும் தொகை : ரூ.1,00,000/-

3. கடன் கணக்கு எண்: HE01BAK00000091592; **கடன்தாரர், கூட்டு கடன்தாரர் மற்றும் அடமானதாரர்களின் பெயர்:** 1. குருநாதன் பிரகாஷ் (விண்ணப்பதாரர்), 2. ராஜகோபால் திவ்யா (இணை–விண்ணப்பதாரர்), 3. சம்பந்தமூர்த்தி குருநாதன் (இணை–விண்ணப்பதாரர்), 4. குருநாதன் சாந்தி (இணை–விண்ணப்பதாரர்), 5. ஹரீஷ்வர் இண்டஸ்ட்ரீஸ் (அதன் உரிமையாளர் குருநாதன் பிரகாஷ் அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது) (இணை–விண்ணப்பதாரர்), முகவரி: எண்.23/46, கீழ வடம்போக்கி தெரு, கும்பகோணம் தாலுகா, சுவாமிமலை, தஞ்சாவூர், தமிழ்நாடு – 612302.; **பிரிவு 13(2)–ன் கீழான கேட்பு அறிவிப்பு தேதி மற்றும் தொகை:** 08–06–2026 மற்றும் 08–06–2026 அன்றைய நிலவரப்படி ரூ.51,49,805/–; **சொத்து/சொத்துகளின் விவரங்கள்:** சொத்தின் விவரம் : ஆவண எண்:1881/2015–ன் படி தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பதிவு மாவட்டம், கும்பகோணம் வட்டம், சுவாமிமலை கிராமம், சுவாமிமலை பேரூராட்சி, சுவாமிமலை சார் பதிவாளர் (SRO) எல்லைக்கு உட்பட்ட, "கீழவடம்போக்கி தெரு, வடசரகில்", நத்தம் சர்வே எண். பழைய நத்தம் சர்வே எண்.150/1A1, புதிய நத்தம் சர்வே எண்–222/8, வருவாய் பதிவேட்டின் படி நத்தம் சர்வே எண்.222/8–ல் மொத்த பரப்பளவு 573 ¾ சதுர அடி (அல்லது) 53.30 சதுர மீட்டரில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்துப் பகுதியும், கதவு எண் (சொத்து வரியின் படி) 23/46. பழைய நத்தம் சர்வே எண்.150/1A1, புதிய நத்தம் சர்வே எண்.222/8–ல் உள்ள 573 ¾ சதுர அடி நிலம் மற்றும் கட்டிடத்திற்கான எல்லைகள்: வடக்கு: குருநாதன் நிலம் மற்றும் வீடு, தெற்கு: கீழவடம்போக்கி தெரு, கிழக்கு: ரெங்கசாமி செட்டியார் வீடு மற்றும் குருநாதன் நிலம் மற்றும் பாதை, மேற்கு: சுப்பிரமணியன் பிள்ளை மற்றும் வீட்டுக்கொல்லை. அளவு விவரங்கள்: வடக்கில் – கிழக்கு மேற்காக: 13 ½ அடி, தெற்கில் – கிழக்கு மேற்காக: 13 ½ அடி, கிழக்கில் – தெற்கு வடக்காக: 42 ½ அடி, மேற்கில் – தெற்கு வடக்காக: 42 ½ அடி, மொத்தம்: 573 ¾ சதுர அடி. அனைத்து ஈஸ்மென்ட் (வழித்தட) உரிமைகள் மற்றும் பாதையுடன். **ஆவண எண்:336/2010–ன் படி:** தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பதிவு மாவட்டம், கும்பகோணம் வட்டம், நத்தம் சுவாமிமலை கிராமம், சுவாமிமலை பேரூராட்சி, சுவாமிமலை சார் பதிவாளர் (SRO) எல்லைக்கு உட்பட்ட, "கீழவடம்போக்கி தெரு வடசரகில்", பழைய நத்தம் சர்வே எண்.150/1A1, புதிய நத்தம் சர்வே எண்.222/8, வருவாய் பதிவேட்டின் படி நத்தம் சர்வே எண்.222/8–ல் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்துப் பகுதியும். மொத்த பரப்பளவு: 701 ¼ + 127 ½ = 828.75 சதுர அடி, (அல்லது) 11.85 சதுர மீட்டர் + 65.15 சதுர மீட்டர் = 77 சதுர மீட்டர். கதவு எண் (சொத்து வரியின் படி) 23/46, நான்கு எல்லைகளுக்குள் அமைந்துள்ள கட்டிடம்: பழைய நத்தம் சர்வே எண்.150/1A1, புதிய நத்தம் சர்வே எண்.222/8–ல் உள்ள 701 ¼ சதுர அடி நிலம் மற்றும் கட்டிடத்திற்கான எல்லைகள். வடக்கு: முகம்மது கனி ராவுத்தர் வீடு மற்றும் கொல்லை, தெற்கு: ராஜேந்திரன் நிலம் வீடு மற்றும் அயிட்டம்–2 சொத்து, கிழக்கு: ரெங்கசாமி செட்டியார் வீடு மற்றும் மனை, மேற்கு: சுப்பிரமணியன் பிள்ளை வீடு மற்றும் கொல்லை. பழைய நத்தம் சர்வே எண்.150/1A1, புதிய நத்தம் சர்வே எண்.222/8–ல் உள்ள 127 ½ சதுர அடி நிலம் மற்றும் கட்டிடத்திற்கான எல்லைகள்: வடக்கு: அயிட்டம்–1 சொத்து, தெற்கு: கீழவடம்போக்கி தெரு, கிழக்கு: ரெங்கசாமி செட்டியார் வீடு மற்றும் மனை, மேற்கு: சுப்பிரமணியன் வீட்டுக்கொல்லை மற்றும் ராஜேந்திரன் வீடு. அளவு விவரங்கள்: வடக்கில் – கிழக்கு மேற்காக: 16 ½ அடி, தெற்கில் – கிழக்கு மேற்காக: 16 ½ அடி, கிழக்கில் – தெற்கு வடக்காக: 42 ½ அடி, மேற்கில் – தெற்கு வடக்காக: 42 ½ அடி, மொத்தம்: 701 ¼ சதுர அடி. அளவு விவரங்கள்: வடக்கில் – கிழக்கு மேற்காக: 3 அடி, தெற்கில் – கிழக்கு மேற்காக: 3 அடி, கிழக்கில் – தெற்கு வடக்காக: 42 ½ அடி, மேற்கில் – தெற்கு வடக்காக: 142 ½ அடி, மொத்தம்: 127 ½ சதுர அடி. அனைத்து ஈஸ்மென்ட் (வழித்தட) உரிமைகள் மற்றும் பாதையுடன். **(அடையாள சுவாதீனம்)**

நிர்ணய விலை: ரூ.64,00,000/- முன் வைப்புத் தொகை : ரூ.6,40,000/- ஏலம் உயர்த்தும் தொகை : ரூ.1,00,000/-

E–ஏல நாளும் நேரமும்: 25/11/2026 அன்று முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை (எண்ணிக்கை வரம்பின்றித் தலா 3 நிமிடங்கள் காலநீட்டிப்புடன்)
டேவணித்தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள்: 24/11/2026 (மாலை 05:30 மணி வரை), ஆய்வு நாள்: 16/11/2026 மற்றும் 17/11/2026 (காலை 10:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை)

1. ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள் / ஏலதாரர்கள் அனைவரும் https://bankauctions.in & www.cholamandalam.com/news/auction–notices இணையத்தளங்களுக்கு வருகை புரியுமாறு அழைக்கப்படுகிறார்கள். E–ஏலம் குறித்த விவரங்கள், உதவி, நடைமுறை, இணைய வழிப் பயிற்சி ஆகியவற்றைப் பெற விருப்பமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: **திரு. முகமது ரஹீஸ் – தொ.பே. எண்: 8124000030 / 6374845616, M/S. 4 குளோசியூர்; ரேகா, தொ.பே. எண் – 8142000062, மின்னஞ்சல்: CholaAuctionLAP@chola.murugappa.com.**
2. E–ஏலத்தில் கலந்து கொள்வதற்கான கூடுதல் விவரங்களுக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறியவும் வருக: https://bankauctions.in & www.cholamandalam.com/news/auction–notices.

இது கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9(1)–இன் கீழான சட்டப்படியான 15 நாள் விற்பனை அறிவிப்பும் ஆகும்.

தேதி: 04-11-2026 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : திருச்சி. கரூர், கும்பகோணம் — சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கனரா வங்கி Canara Bank

சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I
எண். 524, 8வது தளம், கனரா டவர்ஸ், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. போன்: 2849 6339/6900
e-mail id cb2361@canarabank.com, Website: www.canarabank.com

மின் ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களை மறுசீரமைத்தல் சட்டம் 2002 மற்றும் பிணைகாப்பு நிதி சொத்துக்கள் அமலாக்க சட்டம் 2002-ன் கீழ் உள்ள விதி எண். 8 (6)-ன் பிரிவு நிபந்தனைகளின் படி அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடு செய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை **தேனாம்பேட்டை கிளை-ன்** அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அசல் சுவாதீனம்** செய்யப்பட்ட அசையா சொத்துக்களை சொத்து மீட்பு மேலாண்மை கிளை - I, சென்னை-க்கு மாற்றப்பட்டதிலிருந்து, கனரா வங்கி சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I க்கு செலுத்த வேண்டிய **31/08/2026** அன்று வரை **ரூ.1,20,53,568.40/- (ரூபாய் ஒரு கோடியே இருபது இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து ஐநூற்று அறுபத்து எட்டு மற்றும் பைசா நாற்பது மட்டும்)** மேலும் வட்டி மற்றும் வங்கியால் ஏற்படக்கூடிய அதற்குண்டான பிறக்கட்டணங்கள் சேர்த்து **திரு. R. குணசேகரன்,** த/பெ. M. ராஜமாணிக்கம், **திருமதி. G. சுந்தரி,** க/பெ. R. குணசேகரன், **இருவரின் முகவரி :** எண்.13/17, VR புரம், சாலிகிராமம், சென்னை - 600 093. **மேலும் :** 339, மதனாப்பள்ளி, உஞ்சயா விடுதி, கரம்பக்குடி தாலுகா, புதுக்கோட்டை, தமிழ்நாடு - 614 614. ஆகியோர்களிடம் இருந்து வசூலிக்கும் பொருட்டு அசையா சொத்துக்களை **"உள்ளது உள்ளபடி" "உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **24.11.2026** அன்று (காலை 10.30 மணி முதல் 11.30 வரை) (ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் விற்பனை முடியும் வரை கால அளவு நீட்டிக்கப்படும்) விற்பனை செய்யப்பட உள்ளது என்று இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

அசையா சொத்துக்களின் விவரங்கள் : சுவாதீன நிலை : அசல் சுவாதீனம் -

சொத்து எண்.1: CERSAI ID: 400058106952 தென் சென்னை பதிவு மாவட்டம், பூந்தமல்லி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுகா, மடவிலாகம் கிராமம், 20.03.2013 தேதியிட்ட பிளானிங் பர்மிட் எண்.42499, கோப்பு எண்.A1/150/2012-13 மற்றும் கட்டிட அனுமதி எண்.22/2012-13-ன்படி **ARK விக்னேஷ்வரா நகர்** என்ற மனைப்பிரிவில் சர்வே எண்.31/2-ன்படி தற்போதைய சர்வே எண்.31/2Aன்படி 29.01.2013 தேதியிட்ட துணைப்பிரிவு அங்கீகார எண்.149/2012-ன்படி மனை எண்.Bல் மொத்தமுள்ள 1940 சதுர அடி நிலத்தில் 450 சதுர அடி 10 அடி வழியுடன் மொத்தம் - 500 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் **பிளாக்-B-ல் 1வது தளத்தில் 1100 சதுர அடி** கொண்ட குடியிருப்பு ப்ளாட் எண்.**FF1**. மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கில் : ARK விக்னேஷ்வரா நகர், தெற்கில் : சர்வே எண்.31/3B, கிழக்கில் : 10 அடி பொதுவழி மற்றும் துணைப்பிரிவு மனை எண்.A, மேற்கில் : துணைப்பிரிவு மனை -C.

குறைந்த பட்ச விலை : ரூ.25,70,000/- | டேவணித்தொகை : ரூ.2,57,000/- | ஏல உயர்வு தொகை : ரூ.50,000/-

சொத்து எண்.2: CERSAI ID: 400058772922 தென் சென்னை பதிவு மாவட்டம், பூந்தமல்லி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுகா, மடவிலாகம் கிராமம், 20.03.2013 தேதியிட்ட பிளானிங் பர்மிட் எண்.42499, கோப்பு எண்.A1/150/2012-13 மற்றும் கட்டிட அனுமதி எண்.22/2012-13-ன்படி **ARK விக்னேஷ்வரா நகர்** என்ற மனைப்பிரிவில் சர்வே எண்.31/2-ன்படி தற்போதைய சர்வே எண்.31/2Aன்படி 29.01.2013 தேதியிட்ட துணைப்பிரிவு அங்கீகார எண்.149/2012-ன்படி மனை எண்.Bல் மொத்தமுள்ள **1940 சதுர அடி நிலத்தில் 450 சதுர அடி 10 அடி** வழியுடன் மொத்தம் - 500 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் **பிளாக்-B-ல் 1வது தளத்தில் 1100 சதுர அடி** கொண்ட குடியிருப்பு ப்ளாட் எண்.**FF2**. மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கில் : ARK விக்னேஷ்வரா நகர், தெற்கில் : சர்வே எண்.31/3B, கிழக்கில் : 10 அடி பொதுவழி மற்றும் துணைப்பிரிவு மனை எண்.A, மேற்கில் : துணைப்பிரிவு மனை -C.

குறைந்த பட்ச விலை : ரூ.25,70,000/- | டேவணித்தொகை : ரூ.2,57,000/- | ஏல உயர்வு தொகை : ரூ.50,000/-

மின் ஏல தேதி / நேரம் : 24.11.2026
அன்று காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை
ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் விற்பனை முடியும் வரை கால அளவு நீட்டிக்கப்படும்.

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் :
12.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

டேவணி தொகை செலுத்த கடைசி தேதி : குறைந்த பட்ச விலையில் 10% டேவணி தொகையை **M/s.PSB அலையன்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் E-wallet (BAANKNET)** என்ற போர்டலில் நேரடியாகவோ அல்லது டேவணி தொகையை **Challan** எடுத்து **RTGS / NEFT** மூலமாக Challan-ல் குறிப்பிட்டுள்ள கணக்கு விவரத்தில் **23.11.2026 அன்று அல்லது அதற்கு முன்பு மாலை 5.00 மணிக்குள்** செலுத்த வேண்டும்.

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் வளைதளத்தில் **(www.canarabank.com) "E-Auction"** இணைப்பில் தெரிந்து கொள்ளலாம் அல்லது கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை I, சென்னை (தொலைபேசி எண்.044-2849 6339 / 2849 6900), cb2361@canarabank.com என்ற மின் அஞ்சலில் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும் அல்லது ஏல சேவை வழங்குநரின் விவரங்கள்: **Baanknet (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No. 7046612345 / 6354910172/ 8291220220/ 9892219848 / 8160205051, மின்னஞ்சல்: support.baanknet@psballiance.com/ support.baanknet@procure247.com).**
மின் ஏல போர்டல்: https://baanknet.com

தேதி : 31.10.2026 — அதிகாரப்பூர்வ அதிகாரி,
இடம்: சென்னை — கனரா வங்கி

கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்.,

கிளை அலுவலகம் : 2C, ஆகஸ்ட் அவென்யூ, 80 அடி சாலை, செங்குந்தபுரம், கரூர் – 639 002.
Email : karur@canfinhomes.com, Tele: 04324-230970, Cell No. 76250 79152,
www.canfinhomes.com CIN: L85110KA1987PLC008699

கோரிக்கை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுசீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 2002 (எண். 54/2002)–இன் பிரிவு 13(2) ன் கீழ்

(1) திரு. ஷேக்ஃபாராத் M, S/o. முஸ்தபா, எண்.5/25, பிஸ்மிகாலனி, மணவாடி, கரூர்-639005. **(2) திருமதி. சித்திகாபானு அலாவுதீன், W/o.** ஷேக்ஃபாராத் M, எண்.5/25, பிஸ்மிகாலனி, மணவாடி, கரூர்-639005. பின்வரும் கடனீட்டுச் சொத்தின் பாதுகாப்பிற்கு எதிராக எங்கள் கிளையிலிருந்து வீட்டுக்கடன் மற்றும் **அடமானக் கடன்** பெற்றுள்ளீர்கள். நீங்கள் கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்–க்கு, **29.10.2026** நாள்படி ஒப்பந்த விகிதத்திலான எதிர்கால வட்டியையும் சேர்த்து செலுத்தவேண்டிய **மொத்த கடன் பாக்கித்தொகை ரூ.31,23,821/- (ரூபாய் முப்பத்து ஒரு லட்சத்து இருபத்து மூவாயிரத்து எண்ணூற்று இருபத்து ஒன்று மட்டும்)** மற்றும் **அடமானக் கடன் ரூ.7,25,542/- (ரூபாய் ஏழு லட்சத்து இருபத்து ஐயாயிரத்து ஐந்நூற்று நாற்பத்து இரண்டு மட்டும்)** ஆகும்.

அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விவரம்

கரூர் பதிவு மாவட்டம், வெள்ளியணை சார்பதிவாளர் அலுவலக எல்லை, கரூர் வட்டம், மணவாடி கிராமம், புல எண்கள் (S.F.No.) 655/2 (0.68.0 ஹெக்டேர் / 1.68 ஏக்கர்), 654/2 (0.76.0 ஹெக்டேர் / 1.88 ஏக்கர்), 650/1A (0.20.0 ஹெக்டேர் / 0.49-1/2 ஏக்கர்), 650/1B (0.20.0 ஹெக்டேர் / 0.49-1/2 ஏக்கர்), 651/1 (0.32.0 ஹெக்டேர் / 0.80 ஏக்கர்) மற்றும் 650/2A (0.08.5 ஹெக்டேர் / 0.21 ஏக்கர்) ஆகிய நிலங்கள் **(மொத்தம் 2.25.0 ஹெக்டேர் / 5.56 ஏக்கர்)** வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு, "கற்பக நகர் 'A' பிரிவு" (Karpaga Nagar 'A' Group) மற்றும் "கற்பக நகர் 'B' பிரிவு" (Karpaga Nagar 'B' Group) எனப் பெயரிடப்பட்டுள்ளன. இதில், **"கற்பக நகர் 'B' பிரிவு" வீட்டு மனை எண் 172-ன் அளவுகள்:** கிழக்கு-மேற்காக இரு பக்கங்களிலும் தலா 30 அடிகள் மற்றும் வடக்கு-தெற்காக இரு பக்கங்களிலும் தலா 40 அடிகள் ஆகும். மொத்தம் 1200 சதுர அடி (111.52 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட வீட்டு மனை எண் 172, பின்வரும் நான்கு எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: **தெற்கில் -** 20 அடி அகலமுள்ள வடக்கு-தெற்கு திசை சாலை, **கிழக்கில் -** வீட்டு மனை எண் 171, **மேற்கில் -** வீட்டு மனை எண் 173 மற்றும் **வடக்கில் -** வீட்டு மனை எண் 157. மொத்தம் 1200 சதுர அடி (111.52 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட வீட்டு மனை எண் 172-இல், B.P.No.082/BL/2024/00045 என்ற அனுமதி எண்ணின்படி கட்டப்படவுள்ள ஆர்.சி.சி (RCC) தரைத்தள குடியிருப்பு கட்டிடம் மற்றும் இதனுடன் வழக்கமான பாதை உரிமைகள் (mamool pathway rights) மற்றும் பிற பயன்பாட்டு உரிமைகள் (easementary rights) ஆகியவை இதில் அடங்கும்.

SARFAESI சட்டம் 2002–இன் பிரிவு 13(2)ன் கீழ், உங்களுக்கு பதிவு செய்யப்பட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டு, அது சார்பு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது. எனவே, கீழே கையொப்பமிட்டவர் மேற்படி சட்டத்தின்படி, மேற்கண்ட கடனாளிகளின் கடைசியாக அறியப்பட்ட முகவரியில் உள்ள வளாகத்தில் இந்த அறிவிப்புகளை ஒட்டச் செய்துள்ளார். எனவே செய்தித்தாளிலும் வெளியிடப்பட்டுள்ளது. அனுமதியின் விதிமுறைகளை நீங்கள் சரியாக பின்பற்றத் தவறியதால், **NHB** வழிகாட்டுதல்களின்படி தங்களது கடன் கணக்கை **29.10.2026** அன்று **செயல்படாத சொத்தாக (NPA)** வகைப்படுத்தப்பட்டுள்ளது. **29.10.2026** தேதியிலிருந்து மேற்கண்ட தொகையை திருப்பி செலுத்தப்படும் காலம் வரையிலான ஒப்பந்த விகிதப்படியான வட்டியையும் சேர்த்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. அவ்வாறு செய்யத் தவறினால், மேற்கூறிய பாதுகாப்பைச் செயல்படுத்துவதற்கு **SARFAESI** சட்டத்தின் கீழ் நடவடிக்கையை மேற்கொள்ள கீழே கையொப்பமிடப்பட்டவர் கட்டுப்படுத்தப்படுவார். மேலும், கடன்தொகையை முழுவதுமாக செலுத்தி அடமானச் சொத்தை மீட்டுக்கொள்ள சட்டப்பிரிவு 13, உட்பிரிவு 8 கடனாளிகள் / ஜாமீன்தாரர்களுக்கு வழிவகை செய்கிறது.

தேதி : 03.11.2026 — ஒப்பம்/–
இடம் : கரூர் — அதிகாரப்பூர்வ அதிகாரி, கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்.

பேங்க் ஆஃப் பரோடா Bank of Baroda கரூர் மெயின் கிளை : 5வது குறுக்கு, செங்குந்தபுரம், கரூர் – 639 002.
போன் : 91210 73135, 91760 60206. மின்னஞ்சல் : KARUR@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு. கீழே விவரிக்கப்பட்டுள்ள பேங்க் ஆஃப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளானாடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி "எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" மற்றும் "பொறுப்பேற்காத நிலையில்" எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	ஒப்பந்தப்படியான மொத்த நிலுவைத் தொகை 31.10.2026 தேதி அன்று	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
கடன்தாரர் : M/s. ஹெம்ப் ஃபேப்ஸ், பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள், பங்குதாரர்–1 : அருள்ஜோதி G, பங்குதாரர்–2 : சிவரஞ்சினி A, எண்.86, கருப்பகவுண்டன்புதூர், தாந்தோணிமலை, கரூர் – 639004. திரு. அருள்ஜோதி G (பங்குதாரர்), எண்.2 F/2, இந்திரா நகர், காந்திகிராமம் தெற்கு, பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் – 639 004. திருமதி. சிவரஞ்சனி A (பங்குதாரர்), எண்.2 F/2, இந்திரா நகர், காந்திகிராமம் தெற்கு, பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் – 639 004. திரு. குபேந்திரன் R (பங்குதாரர்), எண்.2 F/2, இந்திரா நகர், காந்திகிராமம் தெற்கு, பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் – 639 004.	திரு. R.குபேந்திரனுக்குச் சொந்தமான சார் பிணையத்திற்குள்ளான சொத்து. கரூர் பதிவு மாவட்டம், எண்.1இணை சார் பதிவு அலுவலகம், கரூர் தாலுகா, சணப்பிரட்டி பஞ்சாயத்து, சணப்பிரட்டி கிராமம், சர்வே எண்.1390/A1 ல் உள்ள 3.90 ஏக்கர் நிலம் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டதில், அதிலடங்கிய வீட்டு மனையின் 2400 சதுரடிக்கு நான்கெல்லைகள் விபரம் : வேலுசாமி வகையறாவுக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, வள்ளியம்மாளுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு, 20 அடி அகல தென்வடல் ரோடுக்கு மேற்கு, T.K. பரமேஸ்வர ஐயருக்குச் சொந்தமான வீட்டு மனைக்கு வடக்கு. அளவுகள் : கிழமேல் இருபுறமும் 60 அடி, தென்வடல் இருபுறமும் 40 அடி, என மொத்தம் 2400 சதுரடி நிலம், அங்கு கட்டப்பட்ட கதவு எண்.426 கொண்ட குடியிருப்பு தார்சுக் கூரைக் கட்டிடத்துடன். இதன் வரி விதிப்பு எண்.082/034/00061, குடிநீர் இணைப்பு எண்.082/034/00173 மற்றும் மின்சார சர்வீஸ் இணைப்பு எண்.06–014–006–235 மற்றும் அங்குள்ள அனைத்து ரோடுகளில், வழித்தடங்களில் வழிநடை, வண்டித்தட உரிமைகளுடன். குறிப்பு : ஆவணத்தின்படி சொத்தின் உரிமையாளருக்கு 2400 சதுரடி உரிமையுள்ளது. உள்ளபடி சுவாதீனத்தில் மற்றும் அனுபவிப்பில் உள்ள பரப்பு ஆவணத்தின்படி சர்வே எண்.1390/A11 ல் உள்ள 2180 சதுரடியாகும். எனவே அதுவே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.	ரூ.72,48,996/– மற்றும் சட்டபூர்வ செலவுகள் மற்றும் NPA தேதி அதாவது 22.09.2024 தேதியிலிருந்து M/s. ஹெம்ப் ஃபேப்ஸ் கணக்கிற்கான வங்கியால் ஏற்பட்ட பிற செலவுகள்	26.11.2026 மதியம் 2.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை	1. ரூ.53,95,000/– 2. ரூ.5,39,500/– 3. ரூ.25,000/–	கொள்நிலை (Physical) சுவாதீனம்	25.11.2026 காலை 10.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://bankofbaroda.bank.in/e-auction.htm மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் https://baanknet.com இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை போன் : 0431–2765268 / 9176060206 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 02.11.2026 / இடம் : கரூர் — (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி) / பேங்க் ஆஃப் பரோடா